# தேவனுடைய சங்காரத் தூதன் ஒரு மோசமான அரசன் தன்னுடைய அடிமைகளை விடுவிக்குமாறு பலவந்தப்படுத்தினான்

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே!மக்களை பாவத்தில், மரணத்தில், அசுத்த ஆவியின் பிடியில் இருந்து நீர் மீட்பீர் என்று குழந்தைகள் நம்ப உதவி செய்யும்."



சங்காரத்தூதன்

கீழே உள்ள மூன்று பாகங்கள் கொண்ட நாடகத்தில், கதைசுருக்கமான ஒன்பது கருத்துக்களை (எண்ணிக்கை இடப்பட்டுள்ளது) உபயோகித்து, ஒரு பெரிய பிள்ளையோ அல்லது பெரியவரோ, இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையானதை விளக்கட்டும்.

- இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையான வரலாற்றின் பகுதிகளை நாடகமாக்குக (யாத்.11-15).
- சபைத் தலைவரோடு பேசி இந்த நாடகத்தை அல்லது பகுதியை சிறுவர்கள் அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்
- பிள்ளைகளுக்குப் போதிக்கும் நேரத்தில் இந்த நாடகத்தை ஒத்திகை பார்க்கவும்
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆயத்தம் செயவதில் உதவவும்.
- எல்லா பகுதியையும் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை
- பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ **பார்வோன், பயம்நிறைந்த குழந்தை, கதை கூறுபவர், மோசே** ஆகிய பாத்திரங்களில் நடிக்கலாம்.
- சிறு குழந்தைகள் பல வேடங்களைத் தாங்கும் **நடிகர்களாக** பங்கேற்கலாம்.

## பகுதி ஒன்று

கதை கூறுபவர் : சுருக்கமாகப் பகுதி 1 ன் கதையைக் கூறுகிறார்.

1) கொடூரமான எகிப்தியர்கள் தேவ மக்களை சாட்டையால் அடித்து அடிமைகளாக வேலை வாங்குகிறார்கள்
2) அவர்களின் கூக்குரலைக் கேட்ட தேவன் மோசேயைப் மோசமான அரசனான பார்வோனிடம் அனுப்பி அடிமைகளை விடுவிக்குமாறு கூறுகிறார்.
3) பார்வோன் மறுக்கிறான். எனவே தேவன் வாதைகளை அனுப்பி, விடுதலை செய்யுமாறு பார்வோனை பலவந்தப்படுத்துகிறார்.

பின் கூறுதல் : "மோசமான அரசனான பார்வோனிடம் மோசே கேட்பதைக் கேளுங்கள்."

**மோசே :** இஸ்ரவேலின் மகா உன்னதரான கர்த்தராகிய தேவன் தமது மக்களை அடிமைத் தனத்தில் இருந்து விடுவிக்குமாறு உமக்குக் கட்டளை இடுகிறார்.

**பார்வோன் :** யார் உனது கடவுள்? நான் ஏன் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்? எகிப்தியருக்கு சக்தியுள்ள பல கடவுள்கள் உண்டு.

**மோசே :** எங்கள் தேவன் வாதைகளை அனுப்பி, உமது விக்கிரகங்களை விடவும் அவர் மிகவும் வல்லமையுள்ளவர் என்பதை உமக்குக் காண்பிப்பார்.

**கதை கூறுபவர் :** முதல் வாதை: பழங்கால எகிப்தியர் நைல் நதியைக் கடவுள் ஆக்கினர். எனவே தேவன் அதை இரத்தமாக மாற்றினார்.

**பார்வோன் :** "எங்கள் ஆறுகள் எல்லாம் கெட்டு நாற்றம் எடுக்கின்றன. ஆனால் எமது மக்கள் நல்ல தண்ணீருக்காக கிணறுகளைத் தோண்டுகின்றனர்."

**நடிகர்கள் :** தவளைகளைப் போல துள்ளுதல்.

**கதை கூறுபவர் :** இரண்டாவது வாதை! தவளைகள். தவளைகளைப் பற்றி பார்வோனும் அவனது ஜனங்களும் என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேளுங்கள்.

**பார்வோன் :** "தவளைகள்! எல்லா இடமும்! என்னுடைய படுக்கை அறையில் கூட! வெளியேற்றுங்கள் அவைகளை!"

**நடிகர்கள் :** கையிலும், கழுத்திலும், முகத்திலும் அடித்துக் கொண்டு வாதையைக் குறித்து முறையிடுகிறார்கள்

**கதை கூறுபவர் :** மூன்றாவது வாதை! பேன்கள்! பேன்களைப் பற்றி மக்கள் கூறுவதைக் கேளுங்கள்.

**பார்வோனும் நடிகர்களும்:** தங்களைச் சுற்றியுள்ள வண்டுகளை அடித்தவாறு முறையிடுகிறார்கள்.

**கதைகூறுபவர்:** நான்காவது வாதை வண்டுகள்! பார்வோனும் அவனது ஜனங்களும் வண்டுகளோடு போராடுவதைப் பாருங்கள்!

**நடிகர்கள் :** கைகளை ஊன்றி முழங்காலில் நடந்து மாட்டைப் போல சத்தம் உண்டாக்குதல். பின் கால்களை மேலே தூக்கி தரையில் உருளுதல்

**கதைகூறுபவர் :** ஐந்தாவது வாதை. கால்நடைகளுக்கு வந்த மகா கொள்ளை நோய்! மாடுகள் என்ன செய்கிறது என்பதை நோக்கவும்.

**பார்வோனும் நடிகர்களும் :** சிலர் கைகளையும், முகத்தையும் மூடிக்கொண்டு வலியால் துடிக்கிறார்கள்.

**கதை கூறுபவர் :** ஆறாவது வாதை! கொப்புளங்கள். பார்வோனும் அவனது குடிகளும் கொப்புளங்களால் அவதிப்படுவதைப் பாருங்கள்.

**நடிகர்கள் :** மேலே நோக்கி, கல்மழை விழாதவாறு முகத்தை காத்துக் கொள்ளவும். பின் கீழே விழவும்.

**கதை கூறுபவர் :** ஏழாவது வாதை! கல் மழை! கல் மழை விழும்போது இந்த விக்கிரக ஆராதனையாளர்கள் செய்வதைப் பாருங்கள்.

**நடிகர்கள் :** வெட்டுக்கிளி போல துள்ளவும்.

**பார்வோன் :** "அவற்றைத் தடுத்து நிறுத்து மோசே! அவைகள் பயிர்களை வெட்டுகின்றன."

**கதை கூறுபவர் :** எட்டாவது வாதை! வெட்டுக்கிளிகள்! வெட்டுக் கிளிகள் செய்வதைப் பாருங்கள்!

**நடிகர்கள் :** குருடர்களைப் போல அங்கும் இங்கும் சுற்றுதல். இருட்டாக இருப்பதாகவும் பார்க்க முடியவில்லை என்றும் கூறுதல். கைகளை நீட்டி வழியைத் தேடுதல். ஒருவருக்கு ஒருவர் மோதி கீழே விழுதல்!

**கதை கூறுபவர் :** ஒன்பதாவது வாதை! எகிப்தியர் சூரியனை வணங்கினர். எனவே தேவன் இருட்டை அனுப்பினார்! ஜனங்கள் செய்வதைப் பாருங்கள்.

## பகுதி இரண்டு

கதை கூறுபவர் **:** கதைச் சுருக்கத்தைக் கூறுதல்

1) கடைசி வாதையின் போது சங்காரத் தூதன் தேசத்தின் மேல் பறந்து தலைச்சாண் குழந்தைகளை ஒவ்வொரு வீட்டிலும் சாகடிக்கிறான்.
2) விசுவாசிகள் கதவில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் அடையாளம் இட்டதால் அதைப் பார்த்த தூதன் கடந்து போகிறான்.
3) அவர்கள் ஆட்டுக்குட்டியை அவசரமாக புசிக்கின்றனர். இந்தப் பஸ்கா விருந்தை யூதர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளில் புசிக்கின்றனர்.

**பயப்படும் குழந்தை :** இந்தக் கவிதையை நிறுத்தி உணர்ச்சியோடு பாடலாம் அல்லது வாசிக்கலாம்.

*ஒரு குழந்தையின் அச்சத்தோடு கூடிய நம்பிக்கை*

குழந்தை கவலைப் படுகிறது, "என்னால் தூங்க முடியாது!
எனது இதயம் அச்சத்தால் வேகமாகத் துடிக்கிறது!
இந்த இரவில் நடக்குமென மோசே நேற்றே கூறிவிட்டார்!
மரணத் தூதன் எகிப்தின்மேல் பறப்பான் என்பது நிச்சயமே!
திலைச்சாண் குழந்தை நான் எனது இறப்பும் உறுதி ஆனதுவே,
கதவின் மேலே ஆட்டுக்குட்டி இரத்தக் குறியது இல்லையெனில்!

இரவும் கறுப்புத் திரையாகி இன்னும் இருண்டு வளர்கிறதே
காற்றும் குளிர்ந்து மேலுமது கடுங்களிராய்ப் போகிறதே
எனது வீட்டில் எந்தவித ஒலியையும் நான் கேட்கவில்லை!
சங்காரத் தூதன் ஒருவேளை வரவே இல்லையோ முடிவாக?
ஓ! அவலக் குரல் ஒன்று கேட்கிறதே! அதிக தொலைவில் அது கேட்கும்!
தேவன் அனுப்பிய மரணத்தின் தூதன் தன்வழி போகின்றான்
அருகில் நானும் மரணத்தின் அலறல் ஒலியைக் கேட்கின்றேன்
எல்லா ஓலமும் எகிப்தியரின் குரலாய் அல்லவோ கேட்கிறது? (இடைவெளி)
அலறல் ஒலியைக் கேட்கவில்லை! விசும்பல், இரவின் தொலைவினிலே!
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் நானோ உயிர்வாழ்கின்றேனே!

**பகுதி மூன்று**

**கதைகூறுபவர்:** மூன்றாவது பகுதியின் கதையை சுருக்கமாகக் கூறவும்.

1) பார்வோன் ஜனங்களைப் போக விடுகிறான். பின் மனம்மாறி அவர்களின் பின்னால் சேனையை அனுப்புகிறான்.
2) தமது ஜனங்கள் கடந்துபோக தேவன் செங்கடலின் ஊடே ஒரு பாதையைத் திறக்கிறார்.
3) எகிப்திய சேனை அவர்களைப் பின்தொடர்ந்த போது தண்ணீர் கடந்து வந்து அவர்களை மூழ்கடிக்கிறது.

பின் கூறுவது "கடைசி வாதையினால் எகிப்திய வீடுகளில் தலைச்சாண் குழந்தைகள் இறந்து போனபின் பார்வோன் கூறுவதைக் கேளுங்கள்"

**பார்வோன்:** "என்னுடைய மூத்த மகன் இறந்து விட்டான். எனவே நான் அடிமைகளைப் போக விட்டேன். ஆனால் இப்போதோ என் மனம் மாறி விட்டது. வீரர்களே! அவர்களைத் தொடர்ந்து செல்லுங்கள்! குதிரைகளையும் இரதங்களையம் ஆயத்தம் செய்யுங்கள்! எல்லா இஸ்ரவேலரையும் கொல்லுங்கள்!"



**நடிகர்கள் :** ஓடி, குதிரை ஒட்டி செல்வது போல பாவ் டு வருவதாக அலறல். கீழே விழுதல். மோசே! "பரிசுத்தமானவருக்கே து வல்லமையால் நம்மை அடிமைத்தனத்தில் இருந்தும் மரணத்தில் இருந்து

**கதை கூறுபவர் :** இந்த நாடகத்தை அரங்கேற்ற உ ருக்கும் நன்றி!

**படம் :** குழந்தைகள் தவளையின் படம் வரைக. அடிமைகளை ஒரு மோசமான மன்னிடம் இருந்து விடுவிக்க தேவன் தவளைகள் ஆகிய வாதைகளை அனுப்பினார் என்று படத்தைக் காட்டி பெரியவர்களுக்கு விளக்கவும்.

**கவிதை :** யாத் 15:3-6 வசனங்களை நான்கு குழந்தைகள் பாடவும். இயேசுவுக்கு 1500 வருடங்களுக்கு முன் தேவன் தம்முடைய மக்களை எவ்வாறு காத்தார் என்பதைப் பற்றி பெரிய குழந்தைகள் பாடல் எழுதவும்.

சங் 91:1 ஐ மனனம் செய்க.

**ஜெபம் :** "அன்பான தேவனே! நீர் வல்லமை வாய்ந்தவர்! எல்லோரையும் விட மிகவும் கொடிய இராஜாவாகிய சாத்தானிடம் இருந்து எங்களை விடுவித்தீர். எங்களது நண்பர்களையும் விடுவிக்குமாறு எல்லாம் வல்ல இயேசுவின் நாமத்தினாலே கெஞ்சுகிறோம்."

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net